# Oversea-Chinese Banking Corporation Limited and its Subsidiaries

(சிங்கப்பூரில் இணைக்கப்பட்டது. பதிவு எண்: 193200032W)

### முக்கியம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதி தகவல்கள் ஓவர்சீ-சைனீஸ் பேங்கிங் கார்ப்பரேஷன் லிமிட்டெட் (வங்கி) மற்றும் அதன் துணை நிறுவனங்களின் (தொகுதி) 31 டிசம்பர் 2022 முடிவுற்ற நிதியாண்டுக்குரிய தணிக்கையான நிதியறிக்கைகளின் (நிதி அறிக்கைகள்) சாரத்தை மட்டுமே குறிக்கிறது. வங்கி மற்றும் தொகுதியின் பலாபலன்களையும் நிதிநிலையையும் முழுமையாகப் புரிந்துகொள்ள இதில் போதிய தகவல்கள் இல்லை. தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கைகளின் முழுமையான தொகுப்பை, வங்கியின் https://www.ocbc.com/group/investors/annual-report-and-agm.page இணையத்தளத்தில் காணலாம்.

## வருமான அறிக்கைகள்

### 31 டிசம்பர் 2022ல் முடிவுற்ற நிதியாண்டுக்குரியது

| | தொகுதி | | வங்கி | |
|---|---|---|---|---|
| | 2022<br>$ மில்லி. | 2021<br>$ மில்லி. | 2022<br>$ மில்லி. | 2021<br>$ மில்லி. |
| வட்டி வருமானம் | **11,590** | 7,425 | **7,421** | 3,919 |
| வட்டிச் செலவு | **(3,902)** | (1,570) | **(2,869)** | (708) |
| **நிகர வட்டி வருமானம்** | **7,688** | 5,855 | **4,552** | 3,211 |
| ஆயுள் காப்புறுதியிலிருந்து லாபம் [1] | **971** | 1,137 | **–** | – |
| பொது காப்புறுதியிலிருந்து ப்ரீமிய வருமானம் | **218** | 197 | **–** | – |
| கட்டணமும் தரகும் (நிகரம்) | **1,851** | 2,245 | **879** | 969 |
| லாப ஈவுகள் | **125** | 113 | **1,481** | 1,049 |
| நிகர வர்த்தக வருமானம் | **834** | 763 | **336** | 249 |
| இதர வருமானம் | **(12)** | 286 | **2** | 143 |
| **வட்டி சாரா வருமானம்** | **3,987** | 4,741 | **2,698** | 2,410 |
| **மொத்த வருமானம்** | **11,675** | 10,596 | **7,250** | 5,621 |
| ஊழியர் செலவு | **(3,233)** | (3,028) | **(1,154)** | (1,093) |
| இதர நடைமுறைச் செலவினம் | **(1,793)** | (1,736) | **(1,238)** | (1,131) |
| **மொத்த நடைமுறைச் செலவினம்** | **(5,026)** | (4,764) | **(2,392)** | (2,224) |
| **ஒதுக்குகள் மற்றும் மதிப்பிறக்கத்திற்கு முந்திய நடைமுறை லாபம்** | **6,649** | 5,832 | **4,858** | 3,397 |
| கண்கூடற்ற சொத்துகள் மதிப்பிறக்கம் | **(104)** | (103) | **–** | – |
| கடன்கள் மற்றும் பிற சொத்துகளுக்கான ஒதுக்குகள் | **(584)** | (873) | **(210)** | (442) |
| **அலவன்சுகள், கடன் தீர்ப்புக்கு பிந்திய நடைமுறை லாபம்** | **5,961** | 4,856 | **4,648** | 2,955 |
| இணை நிறுவனங்களின் பலாபலனில் பகிர்வு, வரியின் நிகரம் | **978** | 824 | **–** | – |
| **வருமான வரிக்கு முந்திய லாபம்** | **6,939** | 5,680 | **4,648** | 2,955 |
| வருமான வரி செலவு | **(1,057)** | (648) | **(503)** | (229) |
| **ஆண்டுக்குரிய லாபம்** | **5,882** | 5,032 | **4,145** | 2,726 |
| **இவர்களுக்குரியது:** | | | | |
| வங்கியின் பங்குமுதல்தாரர்கள் | **5,748** | 4,858 | | |
| கட்டுப்படுத்தாத பாத்தியதைகள் | **134** | 174 | | |
| | **5,882** | 5,032 | | |
| **பங்கு ஒன்றுக்கு வருமானம் ($)** | | | | |
| அடிப்படை | **1.27** | 1.07 | | |
| ரொக்கமாக்கப்பட்டது | **1.27** | 1.07 | | |

(1) இதில் $12,245 மில்லியன் (2021: $19,506 மில்லியன்) ப்ரீமியம் மற்றும் முதலீட்டு வருமானமும், தொகுதியின் $11,246 மில்லியன் (2021: $18,285 மில்லியன்) காப்புறுதி கோரல்கள், தரகு, இதர செலவுகளும் உள்ளடங்கும்.

## விரிவான வருமான அறிக்கைகள்

### 31 டிசம்பர் 2022ல் முடிவுற்ற நிதியாண்டுக்குரியது

| | தொகுதி | | வங்கி | |
|---|---|---|---|---|
| | 2022<br>$ மில்லி. | 2021<br>$ மில்லி. | 2022<br>$ மில்லி. | 2021<br>$ மில்லி. |
| **ஆண்டுக்குரிய லாபம்** | **5,882** | 5,032 | **4,145** | 2,726 |
| **இதர விரிவான வருமானம்:** | | | | |
| **பிற்பாடு வருமான அறிக்கையில் மறுபகுப்பு செய்யப்படக்கூடிய அம்சங்கள்:** | | | | |
| FVOCI [1]-லுள்ள நிதிச் சொத்துகள் | | | | |
| ஆண்டுக்குரிய நியாய மதிப்பு நட்டம் | **(2,164)** | (694) | **(807)** | (326) |
| வருமான அறிக்கையில் (ஆதாயம்) / நட்டம் மறுபகுப்பு | | | | |
| - விற்பனையின்பேரில் | **264** | (131) | **149** | (34) |
| - சேதாரத்தின்பேரில் | **(#)** | 3 | **2** | 4 |
| நிகர நடவடிக்கைகளின் வரி | **247** | 98 | **28** | 11 |
| ரொக்கப் புழக்கக் காப்பீடு | **(2)** | (#) | **(22)** | (7) |
| வெளிநாட்டுச் செயல்பாடுகளின் நாணய மாற்று | **(873)** | 110 | **(109)** | (34) |
| இணை நிறுவனங்களின் இதர விரிவான வருமானம் | **(656)** | 339 | **–** | – |
| **பிற்பாடு வருமான அறிக்கையில் மறுபகுப்பு செய்யப்படமாட்டாத அம்சங்கள்:** | | | | |
| வெளிநாட்டுச் செயல்பாடுகளின் நாணய மாற்று | **(54)** | (1) | **–** | – |
| FVOCI [1]-லுள்ள பங்குமுதல் பத்திரங்கள், நியாய மதிப்பின் நிகர மாற்றம் | **(207)** | 134 | **(12)** | 44 |
| வரையறுக்கப்பட்ட அனுகூலத் திட்டங்கள் மறுகணக்கீடு | **2** | (1) | **–** | – |
| சொந்தக் கடன் | **1** | 1 | **1** | 1 |
| **மொத்த இதர விரிவான வருமானம், வரியின் நிகரம்** | **(3,442)** | (142) | **(770)** | (341) |
| **ஆண்டுக்குரிய மொத்த விரிவான வருமானம், வரியின் நிகரம்** | **2,440** | 4,890 | **3,375** | 2,385 |
| **இவற்றுக்குரிய மொத்த விரிவான வருமானம்:** | | | | |
| வங்கியின் பங்குமுதல்தாரர்கள் | **2,490** | 4,735 | | |
| கட்டுப்படுத்தாத பாத்தியதைகள் | **(50)** | 155 | | |
| | **2,440** | 4,890 | | |

(1) இதர விரிவான வருமானத்தின்வழி நியாய மதிப்பு.
(2) # குறியீடு $0.5 மில்லியனுக்குக் குறைவான தொகைகளைக் குறிக்கிறது.

## ஒருங்கிணைக்கப்பட்ட ரொக்கப் புழக்க அறிக்கை

### 31 டிசம்பர் 2022ல் முடிவுற்ற நிதியாண்டுக்குரியது

| $ மில்லி. | 2022 | 2021 |
|---|---|---|
| **நடைமுறை காரியங்களில் இருந்து ரொக்கப் புழக்கம்** | | |
| வருமான வரிக்கு முந்திய லாபம் | **6,939** | 5,680 |
| ரொக்கமற்ற இனங்களுக்கான சரியாக்கங்கள்: | | |
| கடன்கள் மற்றும் பிற சொத்துகளுக்கான ஒதுக்குகள் | **584** | 873 |
| கண்கூடற்ற சொத்துகளின் மதிப்பிறக்கம் | **104** | 103 |
| வரம்பு பரிவர்த்தனைகளில், லாபம் அல்லது நஷ்டம் பத்திரங்களின் நியாயமான மதிப்பில் மற்றும் வழங்கப்பட்ட கடன்களில் மாற்றங்கள் | **130** | 104 |
| சொத்து, சாதனம் தேய்மானம் மற்றும் குத்தகை பொறுப்புகளின் வட்டிச் செலவு | **429** | 416 |
| அரசாங்க, கடன், பங்குமுதல் பங்கு பத்திர விற்பனை பேரிலான நிகர நட்டம் / (ஆதாயம்) | **206** | (92) |
| சொத்து, சாதனம் விற்பனை பேரிலான நிகர ஆதாயம் | **(99)** | (107) |
| பங்கு அடிப்படையிலான செலவு | **80** | 73 |
| இணை நிறுவனங்களின் பலாபலன் பங்கு வரியின் நிகரம் | **(978)** | (824) |
| ஆயுள் காப்புறுதி நிதி தொடர்பானவை | | |
| வருமான வரிக்கு முந்திய உபரி | **999** | 1,221 |
| ஆயுள் காப்புறுதியிலிருந்து மாற்றிய உபரி | **(971)** | (1,137) |
| நடைமுறை சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் மாற்றத்துக்கு முந்திய நடைமுறை லாபம் | **7,423** | 6,310 |
| நடைமுறை சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் மாற்றங்கள்: | | |
| வங்கி சாரா வாடிக்கையாளர்களின் வைப்புகள் | **7,518** | 27,510 |
| வங்கியின் வைப்பும் இருப்பும் | **1,807** | (1,347) |
| செலுத்தத்தக்க சார்பிய மற்றும் இதர பொறுப்புகள் | **7,798** | (6,908) |
| வர்த்தகப் பொறுப்புகள் | **(181)** | 55 |
| மத்திய வங்கிகளில் உள்ள கட்டுப்படுத்தப்பட்ட இருப்புகள் | **229** | (764) |
| அரசாங்கப் பங்குப் பத்திரங்களும் கருவூல உண்டியல்களும் | **(2,913)** | 1,614 |
| லாப நட்டப் பங்குப் பத்திரங்களின் மூலம் நியாய மதிப்பு | **1,931** | (7,059) |
| வங்கிகளில் உள்ள வைப்புகளும் கொடுத்த கடன்களும் | **(4,782)** | 7,354 |
| வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டக் கடன்கள் | **(5,795)** | (23,685) |
| வரவேண்டிய சார்பிய மற்றும் இதர சொத்துகள் | **(5,443)** | 4,087 |
| இதர சொத்துகளிலும் ஆயுள் காப்புறுதி பொறுப்புகளிலும் நிகர மாற்றம் | **2,507** | 8,029 |
| நடைமுறை காரியங்களில் கிடைத்த ரொக்கம் | **10,099** | 15,196 |
| செலுத்தப்பட்ட வருமான வரி [1] | **(1,167)** | (913) |
| **நடைமுறை காரியங்களில் கிடைத்த நிகர ரொக்கம்** | **8,932** | 14,283 |
| **முதலீட்டுக் காரியங்களில் இருந்து ரொக்கப் புழக்கம்** | | |
| இணை நிறுவனங்களிலிருந்து லாப ஈவு | **145** | 138 |
| இணை நிறுவனங்களில் முதலீடுகள் | **–** | (514) |
| கடன் பங்குமுதல் பங்குப் பத்திர கொள்முதல் | **(11,622)** | (12,475) |
| ஆயுள் காப்புறுதி நிதி முதலீட்டுப் பங்குப் பத்திரங்கள் கொள்முதல் | **(37,237)** | (41,636) |
| சொத்து, சாதனம் கொள்முதல் | **(479)** | (443) |
| கடன், பங்குமுதல் பங்குப் பத்திர விற்பனை மூலம் வருவாய் | **13,582** | 12,642 |
| ஆயுள் காப்புறுதி நிதி முதலீட்டுப் பங்குப் பத்திரங்கள் விற்பனை மூலம் வருவாய் | **33,970** | 34,345 |
| சொத்து, சாதனம் விற்பனை மூலம் வருவாய் | **128** | 152 |
| **முதலீட்டுக் காரியங்களில் பயன்படுத்திய நிகர ரொக்கம்** | **(1,513)** | (7,791) |
| **நிதி காரியங்களிலிருந்து ரொக்கப் புழக்கம்** | | |
| கட்டுப்படுத்தாத பாத்தியதைகளில் மாற்றங்கள் | **–** | (1) |
| கருவூலப் பங்குகளாகத் தக்க வைப்பதற்காகத் திருப்பி வாங்கிய பங்கு | **(250)** | (406) |
| செலுத்தப்பட்ட லாப ஈவுகளும் பகிர்வும் | **(2,620)** | (1,544) |
| இதர கடன் வெளியீட்டின் நிகர வெளியீடு / (மீட்பு) | **1,897** | (3,840) |
| நிரந்தர மூலதனப் பங்குப் பத்திர வெளியீட்டின் நிகர வருவாய் | **498** | – |
| திருப்பிக் கொடுக்கப்பட்ட குத்தகை பொறுப்புகள் | **(89)** | (91) |
| கீழ்நிலைப்படுத்திய கடன் வழங்கீட்டிலிருந்து வருவாய் | **1,042** | – |
| வங்கியின் ஊழியர் பங்குத் திட்டத்தின்கீழ் மாற்றித்தந்த / விற்ற கருவூலப் பங்குகளிலிருந்து வசூல் | **150** | 140 |
| கீழ்நிலைப்படுத்திய கடன் வழங்கீடு மீட்பு | **–** | (400) |
| **நிதி காரியங்களில் கிடைத்த / (பயன்படுத்திய) நிகர ரொக்கம்** | **628** | (6,142) |
| **ரொக்கம் மற்றும் ரொக்கச் சமன்களில் நிகர மாற்றம்** | **8,047** | 350 |
| நிகர நாணய மாற்றுச் சரியாக்கங்கள் | **(773)** | 282 |
| ஜனவரி 1ல் ரொக்கமும் ரொக்கத்துக்கிணையானவைகளும் | **22,710** | 22,078 |
| **டிசம்பர் 31ல் ரொக்கமும் ரொக்கச் சமன்களும்** | **29,984** | 22,710 |

(1) 2022ல், தொகுதி $1,167 மில்லியன் (2021: $913 மில்லியன்) வருமான வரி செலுத்தியது. இதில் $576 மில்லியன் (2021: $280 மில்லியன்) சிங்கப்பூரிலும் $591 மில்லியன் (2021: $633 மில்லியன்) மற்ற நாடுகளிலும் செலுத்தப்பட்டது.

OCBC Bank

# Oversea-Chinese Banking Corporation Limited and its Subsidiaries

(சிங்கப்பூரில் இணைக்கப்பட்டது. பதிவு எண்: 193200032W)

## இருப்புநிலைக் குறிப்பு

31 டிசம்பர் 2022 நிலவரப்படி

| | தொகுதி | | வங்கி | |
|---|---|---|---|---|
| | **2022 $ மில்லி.** | **2021 $ மில்லி.** | **2022 $ மில்லி.** | **2021 $ மில்லி.** |
| **பங்குமுதல்** | | | | |
| **வங்கியின் பங்குதாரர்களுக்கு உரியவை** | | | | |
| பங்கு மூலதனம் | **18,048** | 18,040 | **18,048** | 18,040 |
| இதரப் பங்குமுதல் கருவிகள் | **1,696** | 1,198 | **1,696** | 1,198 |
| மூலதன காப்புநிதி | **792** | 782 | **560** | 559 |
| நியாய மதிப்பு காப்புநிதி | **(1,006)** | 848 | **(674)** | (25) |
| வருவாய்க் காப்புநிதி | **33,557** | 31,795 | **17,286** | 15,825 |
| | **53,087** | 52,663 | **36,916** | 35,597 |
| **கட்டுப்படுத்தாத பாத்தியதைகள்** | **1,581** | 1,675 | **–** | – |
| **மொத்த பங்குமுதல்** | **54,668** | 54,338 | **36,916** | 35,597 |
| **பொறுப்புகள்** | | | | |
| வங்கி சாரா வாடிக்கையாளர் வைப்புகள் | **350,081** | 342,395 | **223,310** | 221,213 |
| வங்கிகளின் வைப்புகளும், இருப்புகளும் | **10,046** | 8,239 | **7,691** | 6,708 |
| துணை நிறுவனங்களுக்குச் சேரவேண்டியவை | **–** | – | **36,522** | 28,250 |
| இணை நிறுவனங்களுக்குச் சேரவேண்டியவை | **236** | 431 | **197** | 230 |
| வர்த்தகப் இலாகா பொறுப்புகள் | **212** | 393 | **212** | 393 |
| செலுத்தத்தக்க சார்பியப் பொறுப்புகள் | **16,048** | 9,070 | **14,300** | 7,656 |
| இதர பொறுப்புகள் | **8,525** | 7,163 | **2,844** | 1,906 |
| நடப்பு வரி கடன் பொறுப்புகள் | **995** | 905 | **566** | 458 |
| ஒத்திவைக்கப்பட்ட வரி கடன் பொறுப்புகள் | **2,261** | 2,832 | **125** | 154 |
| வழங்கப்பட்ட கடன்கள் | **21,938** | 20,115 | **21,294** | 19,657 |
| | **410,342** | 391,543 | **307,061** | 286,625 |
| ஆயுள் காப்பு நிதிப் பொறுப்புகள் | **94,946** | 96,306 | **–** | – |
| **மொத்த பொறுப்புகள்** | **505,288** | 487,849 | **307,061** | 286,625 |
| **மொத்த பங்குமுதலும் பொறுப்புகளும்** | **559,956** | 542,187 | **343,977** | 322,222 |
| **சொத்துகள்** | | | | |
| ரொக்கம் மற்றும் மத்திய வங்கிகளில் இருப்புகள் | **34,966** | 27,919 | **27,812** | 22,863 |
| சிங்கப்பூர் அரசாங்க கருவூல உண்டியல்களும் பங்குப் பத்திரங்களும் | **17,096** | 11,112 | **15,889** | 10,106 |
| இதர அரசாங்க கருவூல உண்டியல்களும் பங்கு பத்திரங்களும் | **22,271** | 26,159 | **8,165** | 9,710 |
| வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களும் அவற்றில் உள்ள வைப்புகளும் | **30,244** | 25,462 | **18,680** | 17,516 |
| வாடிக்கையாளர்களுக்குக் கடன்கள் | **291,467** | 286,281 | **201,110** | 189,401 |
| கடனும் பங்குமுதல் பங்கு பத்திரங்களும் | **28,010** | 34,015 | **16,621** | 20,031 |
| விற்பனைக்கு வைத்துள்ள சொத்துகள் | **1** | 11 | **–** | 1 |
| பெறத்தக்க சார்பியச் சொத்துகள் | **15,605** | 9,267 | **13,742** | 7,812 |
| இதர சொத்துகள் | **6,635** | 6,334 | **2,538** | 2,339 |
| ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துகள் | **437** | 280 | **104** | 88 |
| இணை நிறுவனங்கள் | **6,340** | 6,170 | **2,228** | 2,262 |
| துணை நிறுவனங்கள் | **–** | – | **33,923** | 37,018 |
| உடைமை, இயந்திரகம் மற்றும் இயந்திரம் | **3,483** | 3,506 | **818** | 735 |
| முதலீட்டுச் சொத்து | **763** | 801 | **480** | 473 |
| நல்லெண்ண மதிப்பு மற்றும் கண்கூடற்ற சொத்துகளும் | **4,643** | 4,774 | **1,867** | 1,867 |
| | **461,961** | 442,091 | **343,977** | 322,222 |
| ஆயுள் காப்புறுதி நிதி முதலீட்டுப் பங்குப் பத்திரங்களும் இதர சொத்துகளும் | **97,995** | 100,096 | **–** | – |
| **மொத்த சொத்துகள்** | **559,956** | 542,187 | **343,977** | 322,222 |

## பங்குமுதல் மாற்ற அறிக்கை - தொகுதி
### 31 டிசம்பர் 2022ல் முடிவுற்ற நிதியாண்டுக்குரியது

| | வங்கியின் பங்குமுதல்தாரர்களுக்கு உரியவை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| $ மில்லி. | பங்கு மூலதனமும் இதர பங்குமுதலும் | மூலதன காப்புநிதி [1] | நியாய மதிப்பு காப்புநிதி | வருமான காப்புநிதி | மொத்தம் | கட்டுப்படுத்தாத பாத்தியதை | மொத்த பங்குமுதல் |
| **1 ஜனவரி 2022ல் இருப்பு** | **19,238** | **782** | **848** | **31,795** | **52,663** | **1,675** | **54,338** |
| **ஆண்டுக்குரிய மொத்த விரிவான வருமானம்** | | | | | | | |
| **ஆண்டுக்குரிய லாபம்** | **–** | **–** | **–** | **5,748** | **5,748** | **134** | **5,882** |
| **இதர விரிவான வருமானம்** | | | | | | | |
| **பிற்பாடு வருமான அறிக்கையில் மறுபகுப்பு செய்யப்படக்கூடிய அம்சங்கள்:** | | | | | | | |
| FVOCI-லுள்ள நிதிச் சொத்துகள் | | | | | | | |
| ஆண்டுக்குரிய நியாய மதிப்பு நட்டம் | – | – | (2,027) | – | (2,027) | (137) | (2,164) |
| வருமான அறிக்கையில் (ஆதாயம்) / நட்டம் மறுபகுப்பு | | | | | | | |
| - விற்பனையின்பேரில் | – | – | 254 | – | 254 | 10 | 264 |
| - சேதாரத்தின்பேரில் | – | – | # | – | # | (#) | (#) |
| நிகர நடவடிக்கைகளின் வரி | – | – | 224 | – | 224 | 23 | 247 |
| ரொக்கப் புழக்க காப்பீடு | – | – | – | (2) | (2) | – | (2) |
| வெளிநாட்டுச் செயல்பாடுகளின் நாணய மாற்று | – | – | – | (873) | (873) | – | (873) |
| இணை நிறுவனங்களின் இதர விரிவான வருமானம் | – | – | (87) | (569) | (656) | – | (656) |
| **பிற்பாடு வருமான அறிக்கையில் மறுபகுப்பு செய்யப்படமாட்டாத அம்சங்கள்:** | | | | | | | |
| வெளிநாட்டு நடவடிக்கைகளின் நாணய மாற்று | – | – | – | – | – | (54) | (54) |
| FVOCI-லுள்ள பங்குமுதல் பத்திரங்கள், நியாய மதிப்பின் நிகர மாற்றம் | – | – | (218) | 37 | (181) | (26) | (207) |
| வரையறுக்கப்பட்ட அனுகூலத் திட்டங்கள் மறுகணக்கீடு | – | – | – | 2 | 2 | # | 2 |
| சொந்தக் கடன் | – | – | – | 1 | 1 | – | 1 |
| **மொத்த இதர விரிவான வருமானம், வரியின் நிகரம்** | **–** | **–** | **(1,854)** | **(1,404)** | **(3,258)** | **(184)** | **(3,442)** |
| **ஆண்டுக்குரிய மொத்த விரிவான வருமானம்** | **–** | **–** | **(1,854)** | **4,344** | **2,490** | **(50)** | **2,440** |
| **உரிமையாளர்களுடனான பரிவர்த்தனைகள், பங்குமுதலில் நேரடியாகப் பதிவு செய்யப்பட்டது** | | | | | | | |
| **உரிமையாளர்களின் பங்களிப்பும் அவர்களுக்குரிய பகிர்ந்தளிப்பும்** | | | | | | | |
| மாற்றுகள் | 7 | 12 | – | (19) | – | – | – |
| கருவூலப் பங்குகளாகத் தக்க வைப்பதற்காகத் திருப்பி வாங்கிய பங்கு | (250) | – | – | – | (250) | – | (250) |
| லாப ஈவுகளும் பகிர்வும் | – | – | – | (2,576) | (2,576) | (44) | (2,620) |
| உரிமையற்ற பங்குகளின் லாப ஈவிலிருந்து DSP காப்புநிதி | – | – | – | 13 | 13 | – | 13 |
| நிலையான மூலதனப் பங்குப் பத்திரங்கள் வெளியீடு | 498 | – | – | – | 498 | – | 498 |
| பங்கு அடிப்படையிலான ஊழியர் செலவு | – | 8 | – | – | 8 | – | 8 |
| நிர்வாகிகள் அல்லாத இயக்குநர்களுக்கு வெளியிடப்பட்ட பங்குகள் | 1 | – | – | – | 1 | – | 1 |
| DSP Trust-க்கு மாற்றப்பட்ட பங்குகள் | – | (13) | – | – | (13) | – | (13) |
| DSP திட்டத்தின்கீழ் உரிமையுள்ள பங்குகள் | – | 103 | – | – | 103 | – | 103 |
| மாற்றப்பட்ட / விற்கப்பட்ட கருவூலப் பங்குகள் | 250 | (100) | – | – | 150 | – | 150 |
| **உரிமையாளர்களின் மொத்த பங்களிப்பும் அவர்களுக்குரிய பகிர்ந்தளிப்பும்** | **506** | **10** | **–** | **(2,582)** | **(2,066)** | **(44)** | **(2,110)** |
| **31 டிசம்பர் 2022ல் இருப்பு** | **19,744** | **792** | **(1,006)** | **33,557** | **53,087** | **1,581** | **54,668** |
| இருப்புகளில் உள்ளடங்கும்: | | | | | | | |
| இணை நிறுவனங்கள் காப்புநிதியின் பங்கு | – | – | 86 | 3,380 | 3,466 | – | 3,466 |

[1] 1 ஜனவரி 2022ல் நிலவிய $444 மில்லியன் மற்றும் 31 டிசம்பர் 2022ல் நிலவிய $455 மில்லியன் சட்டபூர்வ நட்ட அலவன்ஸ் ஒதுக்கு உள்ளடங்கும்.
[2] # குறியீடு $0.5 மில்லியனுக்குக் குறைவான தொகைகளைக் குறிக்கிறது.

## ஓவர்சீ-சைனீஸ் பேங்கிங் கார்ப்பரேஷன் லிமிட்டெட் உறுப்பினர்களுக்கு சுயேச்சை தணிக்கையாளரின் அறிக்கை

### நிதி அறிக்கைகளின் தணிக்கை குறித்த அறிக்கை

### *எங்கள் கருத்து*

எங்கள் கருத்துப்படி, இணைக்கப்பட்டுள்ள ஓவர்சீ-சைனீஸ் பேங்கிங் கார்ப்பரேஷன் லிமிட்டெட் (வங்கி) மற்றும் அதன் துணை நிறுவனங்களின் (தொகுதி) ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளும், வங்கியின் இருப்புநிலைக் குறிப்பு, வருமான அறிக்கை, விரிவான வருமான அறிக்கை, பங்குமுதல் மாற்ற அறிக்கை ஆகியனவும், நிறுவனங்கள் சட்டம் 1967 (சட்டம்) சட்டப்படியும் சிங்கப்பூர் நிதிநிலை தாக்கல் தரங்களின்படியும் (அனைத்துலகம்) (SFRS(I)s), முறையாகத் தயாரிக்கப்பட்டு, 31 டிசம்பர் 2022 தேதியின்படி தொகுதியின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலையையும் வங்கியின் நிதி நிலையையும், அத்தேதியில் முடிவுற்ற நிதி ஆண்டுக்குரிய தொகுதியின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி பலாபலன், ஒருங்கிணைக்கப்பட்ட பங்குமுதல் மாற்றம், ஒருங்கிணைக்கப்பட்ட ரொக்கப் புழக்கம் மற்றும் வங்கியின் நிதி பலாபலன் மற்றும் பங்குமுதல் மாற்றம் ஆகியவற்றையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன.

### *நாங்கள் தணிக்கை செய்தவை*

வங்கி மற்றும் தொகுதியின் நிதி அறிக்கைகளில் உள்ளடங்குவன:

- 31 டிசம்பர் 2022 தேதியில் முடிவுற்ற ஆண்டுக்குரிய தொகுதி மற்றும் வங்கியின் வருமான அறிக்கைகள்;
- அத்தேதியில் முடிவுற்ற நிதி ஆண்டுக்குரிய தொகுதி மற்றும் வங்கியின் விரிவான வருமான அறிக்கைகள்;
- 31 டிசம்பர் 2022 தேதியின்படி தொகுதி மற்றும் வங்கியின் இருப்புநிலைக் குறிப்பு;
- அத்தேதியில் முடிவுற்ற நிதி ஆண்டுக்குரிய தொகுதியின் பங்குமுதல் மாற்ற அறிக்கை;

# Oversea-Chinese Banking Corporation Limited and its Subsidiaries

(சிங்கப்பூரில் இணைக்கப்பட்டது. பதிவு எண்: 193200032W)

## பங்குமுதல் மாற்ற அறிக்கை - தொகுதி (தொடர்ச்சி)

| $ மில்லி. | வங்கியின் பங்குமுதல்தாரர்களுக்கு உரியவை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | பங்கு மூலதனமும் இதர பங்குமுதலும் | மூலதன காப்புநிதி [1] | நியாய மதிப்பு காப்புநிதி | வருமான காப்புநிதி | மொத்தம் | கட்டுப்பாடில்லாத பாத்தியதை | மொத்த பங்குமுதல் |
| **1 ஜனவரி 2021ல் இருப்பு** | 19,031 | 1,229 | 1,358 | 28,004 | 49,622 | 1,554 | 51,176 |
| **ஆண்டுக்குரிய மொத்த விரிவான வருமானம்** | | | | | | | |
| **ஆண்டுக்குரிய லாபம்** | – | – | – | 4,858 | 4,858 | 174 | 5,032 |
| **இதர விரிவான வருமானம்** | | | | | | | |
| **பிற்பாடு வருமான அறிக்கையில் மறுபகுப்பு செய்யப்படக்கூடிய அம்சங்கள்:** | | | | | | | |
| FVOCI-லுள்ள நிதிச் சொத்துகள் | | | | | | | |
| ஆண்டுக்குரிய நியாய மதிப்பு நட்டம் | – | – | (664) | – | (664) | (30) | (694) |
| வருமான அறிக்கையில் (ஆதாயம்) / நட்டம் மறுபகுப்பு | | | | | | | |
| - விற்பனையின்பேரில் | – | – | (122) | – | (122) | (9) | (131) |
| - சேதாரத்தின்பேரில் | – | – | 3 | – | 3 | (#) | 3 |
| நிகர நடவடிக்கைகளின் வரி | – | – | 91 | – | 91 | 7 | 98 |
| ரொக்கப் புழக்க காப்பீடு | – | – | – | (#) | (#) | – | (#) |
| வெளிநாட்டு நடவடிக்கைகளின் நாணய மாற்று | – | – | – | 110 | 110 | – | 110 |
| இணை நிறுவனங்களின் இதர விரிவான வருமானம் | – | – | 127 | 212 | 339 | – | 339 |
| **பிற்பாடு வருமான அறிக்கையில் மறுபகுப்பு செய்யப்படமாட்டாத அம்சங்கள்:** | | | | | | | |
| வெளிநாட்டு நடவடிக்கைகளின் நாணய மாற்று | – | – | – | – | – | (1) | (1) |
| FVOCI-லுள்ள பங்குமுதல் பத்திரங்கள், நியாய மதிப்பின் நிகர மாற்றம் | – | – | 55 | 65 | 120 | 14 | 134 |
| வரையறுக்கப்பட்ட அனுகூலத் திட்டங்கள் மறுகணக்கீடு | – | – | – | (1) | (1) | (#) | (1) |
| **சொந்தக் கடன்** | – | – | – | 1 | 1 | – | 1 |
| **மொத்த இதர விரிவான வருமானம், வரியின் நிகரம்** | – | – | (510) | 387 | (123) | (19) | (142) |
| **ஆண்டுக்குரிய மொத்த விரிவான வருமானம்** | – | – | (510) | 5,245 | 4,735 | 155 | 4,890 |
| **உரிமையாளர்களுடனான பரிவர்த்தனைகள், பங்குமுதலில் நேரடியாகப் பதிவு செய்யப்பட்டது** | | | | | | | |
| **உரிமையாளர்களின் பங்களிப்பும் அவர்களுக்குரிய பகிர்ந்தளிப்பும்** | | | | | | | |
| மாற்றுகள் | 13 | (436) | – | 423 | – | – | – |
| கருவூலப் பங்குகளாகத் தக்க வைப்பதற்காகத் திருப்பி வாங்கிய பங்கு | (406) | – | – | – | (406) | – | (406) |
| லாப ஈவுகளும் பகிர்வும் | – | – | – | (1,886) | (1,886) | (34) | (1,920) |
| சாதாரண லாப ஈவுக்குப் பதிலாக வெளியிடப்பட்ட பங்குகள் | 376 | – | – | – | 376 | – | 376 |
| உரிமையற்ற பங்குகளின் லாப ஈவிலிருந்து DSP காப்புநிதி | – | – | – | 10 | 10 | – | 10 |
| பங்கு அடிப்படையிலான ஊழியர் செலவு | – | 9 | – | – | 9 | – | 9 |
| நிர்வாகிகள் அல்லாத இயக்குநர்களுக்கு வெளியிடப்பட்ட பங்குகள் | 1 | – | – | – | 1 | – | 1 |
| பங்குரிமை திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட பங்குகள் | 1 | – | – | – | 1 | – | 1 |
| DSP Trust-க்கு மாற்றப்பட்ட பங்குகள் | 83 | (93) | – | – | (10) | – | (10) |
| DSP திட்டத்தின்கீழ் உரிமையுள்ள பங்குகள் | – | 73 | – | – | 73 | – | 73 |
| மாற்றப்பட்ட / விற்கப்பட்ட கருவூலப் பங்குகள் | 139 | – | – | – | 139 | – | 139 |
| **உரிமையாளர்களின் மொத்த பங்களிப்பும் அவர்களுக்குரிய பகிர்ந்தளிப்பும்** | 207 | (447) | – | (1,453) | (1,693) | (34) | (1,727) |
| **துணை நிறுவனங்களில் கட்டுப்பாட்டை இழக்கச்செய்யாத பாத்தியதையில் மாற்றங்கள்** | – | – | – | (1) | (1) | (#) | (1) |
| **துணை நிறுவனங்களில் உள்ள பாத்தியதையில் மொத்த மாற்றங்கள்** | – | – | – | (1) | (1) | (#) | (1) |
| **31 டிசம்பர் 2021ல் இருப்பு** | 19,238 | 782 | 848 | 31,795 | 52,663 | 1,675 | 54,338 |
| இருப்புகளில் உள்ளடங்கும்: | | | | | | | |
| இணை நிறுவனங்கள் காப்புநிதியின் பங்கு | – | – | 174 | 3,115 | 3,289 | – | 3,289 |

(1) 1 ஜனவரி 2021ல் நிலவிய $874 மில்லியன் மற்றும் 31 டிசம்பர் 2021ல் நிலவிய $444 மில்லியன் சட்டபூர்வ நட்ட அலவன்ஸ் ஒதுக்கு உள்ளடங்கும்.
(2) # குறியீடு $0.5 மில்லியனுக்குக் குறைவான தொகைகளைக் குறிக்கிறது.

## பங்குமுதல் மாற்ற அறிக்கை - வங்கி
### 31 டிசம்பர் 2022ல் முடிவுற்ற நிதியாண்டுக்குரியது

| $ மில்லி. | பங்கு மூலதனமும் இதர பங்குமுதலும் | மூலதன காப்புநிதி [1] | நியாய மதிப்பு காப்புநிதி | வருமான காப்புநிதி | மொத்த பங்குமுதல் |
|---|---|---|---|---|---|
| **1 ஜனவரி 2022ல் இருப்பு** | **19,238** | **559** | **(25)** | **15,825** | **35,597** |
| ஆண்டுக்குரிய லாபம் | **–** | **–** | **–** | **4,145** | **4,145** |
| இதர விரிவான வருமானம் | **–** | **–** | **(649)** | **(121)** | **(770)** |
| **ஆண்டுக்குரிய மொத்த விரிவான வருமானம்** [2] | **–** | **–** | **(649)** | **4,024** | **3,375** |
| மாற்றுகள் | **7** | **(7)** | **–** | **–** | **–** |
| கருவூலப் பங்குகளாகத் தக்க வைப்பதற்காகத் திருப்பி வாங்கிய பங்கு | **(250)** | **–** | **–** | **–** | **(250)** |
| லாப ஈவுகளும் பகிர்வும் | **–** | **–** | **–** | **(2,576)** | **(2,576)** |
| உரிமையற்ற பங்குகளின் லாப ஈவிலிருந்து DSP காப்புநிதி | **–** | **–** | **–** | **13** | **13** |
| நிலையான மூலதனப் பங்குப் பத்திரங்கள் வெளியீடு | **498** | **–** | **–** | **–** | **498** |
| பங்கு அடிப்படையிலான ஊழியர் செலவு | **–** | **8** | **–** | **–** | **8** |
| நிர்வாகிகள் அல்லாத இயக்குநர்களுக்கு வெளியிடப்பட்ட பங்குகள் | **1** | **–** | **–** | **–** | **1** |
| மாற்றப்பட்ட / விற்கப்பட்ட கருவூலப் பங்குகள் | **250** | **–** | **–** | **–** | **250** |
| **31 டிசம்பர் 2022ல் இருப்பு** | **19,744** | **560** | **(674)** | **17,286** | **36,916** |
| **1 ஜனவரி 2021ல் இருப்பு** | 19,031 | 994 | 300 | 14,560 | 34,885 |
| ஆண்டுக்குரிய லாபம் | – | – | – | 2,726 | 2,726 |
| இதர விரிவான வருமானம் | – | – | (325) | (16) | (341) |
| **ஆண்டுக்குரிய மொத்த விரிவான வருமானம்** [2] | – | – | (325) | 2,710 | 2,385 |
| மாற்றுகள் | 13 | (444) | – | 431 | – |
| கருவூலப் பங்குகளாகத் தக்க வைப்பதற்காகத் திருப்பி வாங்கிய பங்கு | (406) | – | – | – | (406) |
| லாப ஈவுகளும் பகிர்வும் | – | – | – | (1,886) | (1,886) |
| சாதாரண லாப ஈவுக்குப் பதிலாக வெளியிடப்பட்ட பங்குகள் | 376 | – | – | – | 376 |
| உரிமையற்ற பங்குகளின் லாப ஈவிலிருந்து DSP காப்புநிதி | – | – | – | 10 | 10 |
| பங்கு அடிப்படையிலான ஊழியர் செலவு | – | 9 | – | – | 9 |
| நிர்வாகிகள் அல்லாத இயக்குநர்களுக்கு வெளியிடப்பட்ட பங்குகள் | 1 | – | – | – | 1 |
| பங்குரிமை திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட பங்குகள் | 1 | – | – | – | 1 |
| DSP Trust-க்கு மாற்றப்பட்ட பங்குகள் | 83 | – | – | – | 83 |
| மாற்றப்பட்ட / விற்கப்பட்ட கருவூலப் பங்குகள் | 139 | – | – | – | 139 |
| **31 டிசம்பர் 2021ல் இருப்பு** | 19,238 | 559 | (25) | 15,825 | 35,597 |

(1) 1 ஜனவரி 2022ல் நிலவிய $444 மில்லியன் (1 ஜனவரி 2021: $874 மில்லியன்) மற்றும் 31 டிசம்பர் 2022ல் நிலவிய $444 மில்லியன் (31 டிசம்பர் 2021: $444 மில்லியன்) சட்டபூர்வ நட்ட அலவன்ஸ் ஒதுக்கு உள்ளடங்கும்
(2) விரிவான விவரத்திற்கு விரிவான வருமான அறிக்கையைப் பார்க்கவும்.

## உறுப்பினர்களுக்கு சுயேச்சை தணிக்கையாளர்களின் அறிக்கை (தொடர்ச்சி)

- அத்தேதியில் முடிவுற்ற நிதி ஆண்டுக்குரிய வங்கியின் பங்குமுதல் மாற்ற அறிக்கை;
- அத்தேதியில் முடிவுற்ற நிதி ஆண்டுக்குரிய தொகுதியின் ஒருங்கிணைக்கப்பட்ட ரொக்கப் புழக்க அறிக்கை; மற்றும்
- குறிப்பிடத்தக்க கணக்குக் கொள்கைகளின் சுருக்கம் உள்ளடங்கும் நிதி அறிக்கைகளின் குறிப்புகள்.

### *கருத்துக்கான அடிப்படை*

நாங்கள் சிங்கப்பூர் தணிக்கை தரங்களுக்கு (SSAs) ஏற்ப தணிக்கை செய்தோம். அந்தத் தரங்களின்கீழ் எங்களுக்குள்ள பொறுப்புகள் எங்கள் அறிக்கையின் நிதி அறிக்கைகளின் தணிக்கையில் தணிக்கையாளரின் பொறுப்புகள் பகுதியில் மேற்கொண்டு விளக்கப்பட்டுள்ளன.

நாங்கள் பெற்ற தணிக்கை ஆதாரங்கள் போதுமானவை என்றும் எங்கள் கருத்துக்கு அடிப்படை வழங்கப் பொருத்தமானவை என்றும் நாங்கள் நம்புகிறோம்.

### *சார்பற்றமை*

நாங்கள் கணக்கியல் மற்றும் நிறுவன ஒழுங்குமுறை ஆணையத்தின் நிபுணத்துவ நடத்தை குறியீடு மற்றும் பொது கணக்காய்வாளர்கள் மற்றும் கணக்கியல் நிறுவனங்களுக்கான நெறிமுறைகள் (ACRA குறியீடு) ஆகியவற்றின்படியும் சிங்கப்பூரில் நிதிநிலை அறிக்கைகளைத் தணிக்கை செய்வதற்கு அவசியமான நெறிமுறை நிபந்தனைகளின்படியும் தொகுதியுடன் சம்பந்தமில்லாத சுதந்திர அமைப்பாகச் செயல்பட்டு, இந்த நிபந்தனைகளுக்கும் ACRA குறியீட்டுக்கும் ஏற்ப எங்களது மற்ற நெறிமுறை பொறுப்புகளை நிறைவேற்றியிருக்கிறோம்.

### *எங்கள் தணிக்கை அணுகுமுறை*

எங்கள் தணிக்கை வடிவமைப்பின் ஒரு பகுதியாக, குறிப்பிடத்தக்கதன்மையை நிர்ணயித்து இணைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கைகளில் குறிப்பிடத்தக்க விவரப்பிழைகளின் இடர்கோள்களை மதிப்பிட்டோம்; எடுத்துக்காட்டாக, ஊகங்களும் நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளின் தொடர்பில் மற்றும் தேவைப்பட்ட குறிப்பிடத்தக்கக் கணக்கியல் கணிப்புகளின் தொடர்பில் நிர்வாகம் வழங்கிய அகநிலை தீர்ப்புகளை பரிசீலித்தோம். எங்கள் தணிக்கைகள் அனைத்திலும் செய்வதைப் போலவே, நாங்கள் உள்கட்டுப்பாடுகள் மீதான நிர்வாகத்தின் ஆதிக்க இடர்பாட்டைக் கவனித்து, மோசடி காரணமாக விவரப் பிழை நேரக்கூடிய அபாயத்தைப் பிரதிநிதிக்கும் பாரபட்சத்திற்கு ஆதாரம் இருக்கிறதா என்பன உள்ளிட்ட இதர விவகாரங்களைப் பரிசீலித்தோம்.

### *முக்கிய தணிக்கை விவகாரங்கள்*

முக்கிய தணிக்கை விவகாரங்கள் என்பது, எங்களது நிபுணத்துவ மதிப்பீட்டின்படி, 31 டிசம்பர் 2022 முடிவுற்ற நிதி ஆண்டுக்குரிய நிதி அறிக்கைகள் குறித்த எங்கள் தணிக்கைக்கு மிகவும் முக்கியத்துவமிக்க விவகாரங்களாகும். நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த தணிக்கையின் அடிப்படையில் இவ்விவகாரங்கள் ஆராயப்பட்டு, அதற்கேற்ப எங்கள் கருத்தை வகுக்கையில், இவ்விவகாரங்கள் குறித்து தனியொரு கருத்தை நாங்கள் வெளியிடவில்லை.

# Oversea-Chinese Banking Corporation Limited and its Subsidiaries

(சிங்கப்பூரில் இணைக்கப்பட்டது. பதிவு எண்: 193200032W)

## லாப ஈவுகள் / பகிர்வுகள்

| $ மில்லி. | 2022 | 2021 |
|---|---|---|
| சாதாரண லாப ஈவுகள்: | | |
| முந்திய நிதி ஆண்டுக்கு 28 காசு வரிவிலக்குபெற்ற இறுதி லாப ஈவு செலுத்தப்பட்டது (2021: வரிவிலக்குபெற்ற லாப ஈவு 15.9 காசு) | **1,260** | 712 |
| நடப்பு நிதி ஆண்டுக்கு 28 காசு வரிவிலக்குபெற்ற இடைக்கால லாப ஈவு செலுத்தப்பட்டது (2021: வரிவிலக்குபெற்ற லாப ஈவு 25 காசு) | **1,260** | 1,128 |
| மற்ற பங்குமுதல் அம்சங்களுக்கான பகிர்வுகள்: | | |
| 4.0% நிலையான மூலதனப் பங்குப் பத்திரங்கள் | **40** | 40 |
| 3.0% நிலையான மூலதனப் பங்குப் பத்திரங்கள் | **6** | 6 |
| 3.9% நிலையான மூலதனப் பங்குப் பத்திரங்கள் | **10** | – |
| | **2,576** | 1,886 |

31 டிசம்பர் 2022 முடிவுற்ற நிதியாண்டில் சாதாரண பங்கு ஒன்றுக்கு வரிவிலக்கு பெற்ற இறுதி லாப ஈவு 40 காசு வழங்க வங்கியின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்கள் அங்கீகாரம் அளித்தனர்.

## தொகுதி மூலதன வள விகிதங்கள்

MAS அறிக்கை 637-ல் உள்ளபடி, பேஸல் III மூலதன வளத் தரங்களுக்குத் தொகுதி உட்பட்டது.

| $ மில்லி. | 2022 | 2021 |
|---|---|---|
| **பொதுப் பங்குமுதல் படி 1 மூலதனம்** | **35,179** | 34,845 |
| கூடுதல் படி 1 மூலதனம் | **1,730** | 1,231 |
| படி 1 மூலதனம் | **36,909** | 36,076 |
| படி 2 மூலதனம் | **4,028** | 3,497 |
| **மொத்த தகுதிபெறும் மூலதனம்** | **40,937** | 39,573 |
| **இடர் மதிப்பு சொத்துகள்** | **231,648** | 224,866 |
| **மூலதன வள விகிதம்** | | |
| பொது பங்குமுதல் படி 1 | **15.2%** | 15.5% |
| படி 1 | **15.9%** | 16.0% |
| மொத்தம் | **17.7%** | 17.6% |

## உறுப்பினர்களுக்கு சுயேச்சை தணிக்கையாளர்களின் அறிக்கை (தொடர்ச்சி)

*முக்கிய தணிக்கை விவகாரம்*

**வாடிக்கையாளர்களுக்கான கடன்களின் சேதாரம்**
**(நிதி அறிக்கைகளின் குறிப்புகள் 2.25, 26, 28, 30 பார்க்கவும்)**

சேதாரமற்ற கடன்கள் மற்றும் சேதாரமுள்ள கடன்கள் ஆகியவற்றுக்கான தொகுதியின் ஒதுக்கு 31 டிசம்பர் 2022 தேதிப்படி முறையே S$2,205 மில்லியன் மற்றும் S$1,308 மில்லியன். இந்த ஒதுக்கு, SFRS(I) 9 நிதி அம்சங்களின்கீழ் (SFRS(I) 9) இடம்பெறும் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள் (ECL) சட்டமைப்பின்படி தொகுதியால் நிர்ணயிக்கப்பட்டன.

*வாடிக்கையாளர்களுக்கான கடன் சேதாரமற்ற கடன்களின் ECL*

வாடிக்கையாளர்களுக்கான கடன் சேதாரமற்ற கடன்களின் ECL-ஐ பொறுத்தவரை, உள் மற்றும் வெளித் தரவுகளையும் குறிப்பிட்ட சில கணிப்புகளையும் சார்ந்திருக்கும் மாதிரியமைப்புகளைத் தொகுதி பயன்படுத்துகிறது. பின்வருவன உள்ளிட்ட அம்சங்கள் சார்ந்த குறிப்பிடத்தக்க மதிப்பீடும் ஊகங்களும் உள்ளடங்கும் இந்தக் கணிப்பு அடிப்படையில் நிச்சயமற்றது என்பதால் நாங்கள் இதை முக்கிய தணிக்கை விவகாரமாகக் கருதுகிறோம்:

- கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறதா என்பதை நிர்ணயித்தல்;
- முன்னோக்குள்ள பரந்த பொருளியல் சூழ்நிலைகளைக் கணித்தல்; மற்றும்
- ECL மாதிரியமைப்புகளில் திருத்தங்களை அடையாளம் கண்டு நிர்ணயித்தல்

மேலும், தற்போதைய குறிப்பிடத்தக்க நிகழ்வுகளால் (எ.கா. பொருளியல் மற்றும் உலக அரசியல் நிலவரங்கள்) இந்தக் கணிப்புகளின் நிச்சயமின்மையும், ECL கணிப்பதற்குத் தேவையான மதிப்பீட்டின் அளவும் கூடியிருக்கிறது.

*வாடிக்கையாளர்களுக்கான கடன் சேதாரமுள்ள கடன்களின் ECL*

31 டிசம்பர் 2022 நிலவரப்படி, வாடிக்கையாளர்களுக்கான கடன் சேதாரமுள்ள கடன்களுக்கு தொகுதி செய்த ECL ஒதுக்கில் 56% (S$732 மில்லியன்) உலகளாவிய மொத்த விற்பனை வங்கித் தொழில் (GWB) கடன் பட்டியலைச் சார்ந்திருந்தது.

வாடிக்கையாளர்களுக்கான கடன் சேதாரமுள்ள கடன்களுக்கான ECL ஒதுக்குகளின் அவசியத்தை நிர்ணயிக்கவும் தொகையைக் கணிக்கவும் நிர்வாகம் அதிக தற்சார்புள்ள மதிப்பீடுகளையும் ஊகங்களையும் பயன்படுத்தியதால் இந்த அம்சத்தில் நாங்கள் கவனம் செலுத்தினோம். மேலும், MAS அறிக்கை 612-ன்படி கடன் பெறுபவர்களின் கடன்தர மதிப்பீட்டுக்கும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகள் தேவைப்பட்டன.

GWB-ன் கடன் சேதாரமுள்ள கடன் பட்டியலுக்காக நிர்வாகம் செய்த குறிப்பிடத்தக்க மதிப்பீட்டிலும் கணிப்பிலும் பின்வருவன உள்ளடங்கும்:

- கடன் சேதாரமுள்ள வெளிப்பாடுகளை அடையாளம் காணுதல்;
- கடன் பெறுபவர்களின் எதிர்கால பலாபலனையும் மீட்கக்கூடிய ரொக்கப் புழக்கத்தையும் கணித்தல்; மற்றும்
- ஈட்டு மதிப்புகளையும் எதிர்பார்க்கப்படும் ரொக்கப் புழக்கத்தின் காலத்திட்டத்தையும் நிர்ணயித்தல்.

ECL ஒதுக்குகளின் கணிப்பைத் தற்போதைய குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் (எ.கா. பொருளியல் மற்றும் உலக அரசியல் நிலவரங்கள்) மேலும் சிக்கலாக்கியுள்ளன. இந்நிகழ்வுகளின் விளைவுகளும் பாதிப்புகளும் நிச்சயமற்றவையாக இருக்கின்றன.

*விவகாரத்திற்கு எங்கள் தணிக்கை எவ்வாறு தீர்வு கண்டது*

*வாடிக்கையாளர்களுக்கான கடன் சேதாரமற்ற கடன்களின் ECL*

நாங்கள் வாடிக்கையாளர்களுக்கான கடன் சேதாரமற்ற கடன்களின் ECL மீதான கட்டுப்பாடுகளின் வடிவமைப்பையும் நடைமுறை செயலாற்றலையும் பரிசீலனை செய்தோம். அந்தக் கட்டுப்பாடுகளில் பின்வருவன உள்ளடங்கும்:

- ECL மாதிரியமைப்புகளில் பயன்படுத்தப்பட்ட முன்னோக்குள்ள தகவல்களின் மறுஆய்வு மற்றும் அங்கீகரிப்பு;
- ECL மாதிரியமைப்புகளில் நம்பகமான, துல்லியமான முக்கிய தரவுகளின் பயன்பாடு;
- பயன்படுத்தப்பட்ட மாதிரியமைப்புத் திருத்தங்கள் உட்பட, ECL முடிவுகளின் மறுஆய்வு மற்றும் அங்கீகரிப்பு;
- ECL மாதிரியமைப்புகளின் சுயேச்சை உறுதிப்பாடு மற்றும் மாதிரியமைப்புகளின் உறுதிப்பாட்டின் முடிவுகளில் நிர்வாகத்தின் மறுஆய்வு; மற்றும்
- ECL செயல்முறை மற்றும் மூலச் செயல்முறைகளிலிருந்து ECL செயல்முறைக்குச் செல்லும் தரவுகளின் முழுமையையும் துல்லியத்தையும் கண்காணிக்கும் தகவல் தொழில்நுட்பச் செயலியக்கக் கட்டுப்பாடுகள் மீதான பொதுவான தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகள்.

எங்கள் தணிக்கை நோக்கங்களுக்கு இந்தக் கட்டுப்பாடுகளைச் சார்ந்திருக்க முடியும் என நாங்கள் தீர்மானித்தோம்.

தொகுதியின் ECL மாதிரியமைப்பு மாதிரியில், நாங்கள் முன்வடிவக் கணக்கீட்டு முறைகளை ஆராய்ந்து, மாதிரியமைப்பில் நிர்வாகம் செய்த முக்கிய மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களையும் பயன்படுத்தப்பட்ட வரையறைகளையும் நியாயமானவையா என்பதைப் பரிசீலித்தோம். ECL மாதிரியமைப்புகள் மீதான எங்கள் பரிசீலனையின் ஒரு பகுதியாக, தொகுதியின் மாதிரியமைப்பு உறுதிப்பாட்டு இயக்கத்தின் சுயேச்சை மாதிரியமைப்பு உறுதிப்பாட்டின் முடிவுகளையும் நாங்கள் மறுஆய்வு செய்தோம்.

நாங்கள் "குறிப்பிடத்தக்கக் கடன் இடர் அதிகரிப்பை" நிர்ணயிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வரன்முறைகளின் நியாயத்தன்மையையும், அளவியல் மற்றும் தரவியல் வரன்முறைகளின் அடிப்படையில் வெளிப்பாடுகளைக் கட்டம் 1 மற்றும் கட்டம் 2ல் ஒதுக்கீடு செய்ததன் துல்லியத்தையும் காலத்தருணத்தையும் பரிசீலனை செய்தோம்.

எங்கள் பணியின்போது, மாதிரியமைப்புத் தயாரிப்புக்குப் பிறகு செய்யப்பட்ட திருத்தங்களின் அடிப்படைக் காரணங்களையும் கணக்கீட்டு அடிப்படையையும் நாங்கள் சோதித்தோம்.

மொத்தத்தில், வாடிக்கையாளர்களுக்கான கடன் சேதாரமற்ற கடன்களுக்கு ECL கணிப்பதற்குத் தொகுதி பயன்படுத்திய கணக்கீட்டு முறைகளும் ஊகங்களும் நியாயமாக இருப்பதாக நாங்கள் மதிப்பிடுகிறோம்.

*வாடிக்கையாளர்களுக்கான கடன் சேதாரமுள்ள கடன்களின் ECL*

நாங்கள் கடன் தரமிடல் மீதான முக்கிய கட்டுப்பாடுகள், கடன் கண்காணிப்பு, வாடிக்கையாளர்களுக்கான கடன்களுக்கான ECL ஒதுக்குகள் குறித்து நிர்வாகம் செய்த தீர்மானங்கள் ஆகியவற்றின் வடிவமைப்புச் செயலாற்றலைப் பரிசீலித்து, நடைமுறைச் செயலாற்றலைச் சோதித்தோம். அந்தக் கட்டுப்பாடுகளில் பின்வருவன உள்ளடங்கும்:

- கடன் இடர் நிர்வாகக் குழுவின் மேற்பார்வை மற்றும் கடன் இடர் மறுஆய்வு;
- கடன் பட்டியல் மறுஆய்வு மற்றும் கண்காணிப்பு;
- ஈட்டுப்பொருள் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு;
- கடன் ஒப்பந்தங்கள் மற்றும் மீறல்கள் கண்காணிப்பு; மற்றும்
- MAS அறிக்கை 612-ன்படி வாடிக்கையாளர்களுக்கான கடன்களின் பகுப்பு.

எங்கள் தணிக்கை நோக்கத்திற்கு இந்தக் கட்டுப்பாடுகளை நாங்கள் சார்ந்திருக்க முடியும் என நாங்கள் தீர்மானித்தோம்.

நாங்கள் GWB கடன் பட்டியலிலிருந்து கடன் வெளிப்பாடுகளின் மாதிரிகளைத் தேர்ந்தெடுத்து, MAS அறிக்கை 612-ன்படி விதிமுறைகளின்படி, கடன் தரமிடலின் பொருத்தத்தைப் பரிசீலிக்க கடன் கோப்பு மறுஆய்வுகளை மேற்கொண்டோம். அதே சமயத்தில், கடன் சேதாரமுள்ள வெளிப்பாடுகளை அடையாளம் காண்கையில் குறிப்பிடத்தக்க நடப்பு நிகழ்வுகளின் விளைவுகளில் நிர்வாகம் செய்த பரிசீலனையையும் கவனத்தில் கொண்டோம்.

தற்சார்பற்ற சேதார ஆதாரம் இருந்தபோது, ECL ஒதுக்குகள் உரிய காலத்தில் அடையாளம் காணப்பட்டதா என்பதைப் பரிசீலித்து, அத்தகைய சேதாரத்தின் அளவை மதிப்பிட்டோம். எங்கள் பணியில் பின்வருவன உள்ளடங்கின:

- கடன் பெறுபவரின் பின்னணி விவரங்களையும் அண்மை சூழ்நிலையையும் கவனித்தல்;
- தொகைகள், கடன்மீட்பு காலகட்டம் உட்பட, கடன் பெறுபவரின் எதிர்பார்க்கப்படும் எதிர்கால ரொக்கப் புழக்கத்தை நிர்ணயிக்க நிர்வாகம் செய்த முக்கிய ஊகங்களைப் பரிசீலனை செய்து சோதித்தல்;
- ஈட்டுப்பொருளின் சாத்திய மதிப்பை, சுயேச்சை மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைக்குமாயின் அவை உள்ளிட்ட வெளிதரப்பிலிருந்து கிடைத்த ஆதாரத்துடன் ஒப்பிடுதல்; மற்றும்
- சேதாரக் கணக்கீட்டைச் சோதித்தல்.

கடன் சேதாரமுள்ளவை என நிர்வாகத்தால் பகுக்கப்படாத வாடிக்கையாளர்களுக்கான கடன் சேதாரமற்ற கடன்களின் மாதிரிகளில், வாடிக்கையாளர்களைப் பற்றிய எங்களின் புரிந்துணர்வு, தொழில் சூழல், இதர வெளிதரப்பு ஆதாரம் ஆகியவற்றின் அடிப்படையில், நிர்வாகத்தின் பகுப்பு பொருத்தமானதா என்பதை நிர்ணயிக்க நிர்வாகத்தின் முக்கிய ஊகங்களைச் சோதித்தோம்.

நாங்கள் மேற்கொண்ட செயல்பாடுகளின் அடிப்படையில், வாடிக்கையாளர்களுக்கான கடன் சேதாரமுள்ள கடன்களுக்கான ECL ஒதுக்குகள் ஏற்புடைய கணிப்புகளின் வரம்புக்குள் இருப்பதாக மதிப்பிட்டோம்.

*முக்கிய தணிக்கை விவகாரம்*

**நியாய மதிப்பில் கணக்கிடப்பட்ட நிதி அம்சங்களின் மதிப்பீடு -நிலை 2 மற்றும் 3**
**(நிதி அறிக்கைகளின் குறிப்புகள் 2.25, 41.3 பார்க்கவும்)**

31 டிசம்பர் 2022 நிலவரப்படி, தொகுதியிடம் நிலை 2 எனப் பகுக்கப்பட்ட நியாய மதிப்பில் கணக்கிடப்பட்ட S$62 பில்லியன் பெறுமானமுள்ள நிதிச் சொத்துகளும் S$17 பில்லியன் பெறுமானமுள்ள நிதிப் பொறுப்புகளும் இருந்தன. இவை முறையே நியாய மதிப்பில் கணக்கிடப்பட்ட நிதிச் சொத்துகளில் 35% மற்றும் நிதிப் பொறுப்புகளில் 96%-ஐ பிரதிநிதிக்கின்றன.

நாங்கள் நிலை 2 நிதி அம்சத்தின் மதிப்பீட்டை முக்கிய தணிக்கை விவகாரமாகக் கருதினோம். அது தொகுதிக்கு நிதியளவில் குறிப்பிடத்தக்கது என்பதும், பொருத்தமான மாதிரியமைப்புகள், ஊகங்கள், உள்ளீடுகள் ஆகியவற்றின் பயன்பாட்டுக்கு மதிப்பீடு அவசியம் என்பதும் இதற்குக் காரணம்.

தொகுதியிடம் நிலை 3 எனப் பகுக்கப்பட்ட நியாய மதிப்பில் கணக்கிடப்பட்ட S$7 பில்லியன் பெறுமானமுள்ள நிதிச் சொத்துகளும் S$283 மில்லியன் பெறுமானமுள்ள நிதிப் பொறுப்புகளும் இருந்தன. இவை முறையே நியாய மதிப்பில் கணக்கிடப்பட்ட நிதிச் சொத்துகளில் 4% மற்றும் நிதிப் பொறுப்புகளில் 2%-ஐ பிரதிநிதிக்கின்றன.

நாங்கள் நிலை 3 நிதிச் சொத்துகள் மற்றும் நிதிப் பொறுப்புகளின் மதிப்பீட்டில் கவனம் செலுத்தினோம். ஏனெனில், இந்த நிதி அம்சங்கள் சிக்கலானவை அல்லது ரொக்கமாக்க முடியாதவை என்பதாலும், ரொக்கமாக்கச் சந்தை இல்லாத காரணத்தால் தொகுதியின் மதிப்பீடுகளை ஆதரிக்க குறைவான வெளிதரப்பு ஆதாரமே இருக்கின்றன என்பதாலும், இந்த நிதி அம்சங்களை மதிப்பிடும்போது நிர்வாகம் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளும் ஊகங்களும் (மதிப்பீட்டு மாதிரியமைப்புகளைப் பயன்படுத்தி) செய்கிறது.

*விவகாரத்திற்கு எங்கள் தணிக்கை எவ்வாறு தீர்வு கண்டது*

நாங்கள் தொகுதியின் நிதி அம்ச மதிப்பீட்டு முறை மீதான கட்டுப்பாடுகளின் வடிவமைப்பைப் பரிசீலித்து, அதன் நடைமுறைச் செயலாற்றலைச் சோதித்தோம். பின்வருவன மீதான முக்கிய கட்டுப்பாடுகள் அதில் உள்ளடங்கும்:

- மதிப்பீட்டு மாதிரியமைப்புகள் மீதான நிர்வாகத்தின் சோதனையும் அங்கீகரிப்பும்;
- மதிப்பீட்டு மாதிரியமைப்புகளில் பயன்படுத்தப்பட்ட தரவுகள் மற்றும் இதர உள்ளீடுகளின் முழுமை மற்றும் துல்லியம்;
- தொகுதி செய்திருக்கக்கூடிய பொருத்தமற்ற மதிப்பீடுகளின் உத்தேச அறிகுறிகளை அடையாளம் காண எதிர்தரப்பு மதிப்பீடுகளைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும் ஈட்டுப்பொருள் சர்ச்சைகள் குறித்த தொடர் நடவடிக்கை; மற்றும்
- மதிப்பீட்டுத் திருத்தங்கள் உட்பட, சந்தை இடர் நிர்வாகக் குழு மேற்கொண்ட மதிப்பீட்டு நடைமுறைகள் மீதான ஆளுமை செயற்பாடுகள் மற்றும் கண்காணிப்பு.

எங்கள் தணிக்கை நோக்கங்களுக்கு இந்தக் கட்டுப்பாடுகளைச் சார்ந்திருக்க முடியும் என நாங்கள் தீர்மானித்தோம்.

எங்களது மதிப்பீட்டு நிபுணர்களுடன் சேர்ந்து, தொகுதியின் நிலை 2 நிதி அம்சங்களின் மதிப்பீட்டை எங்களது சொந்தக் கணிப்புகளுடன் மாதிரி அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்த்தோம். சந்தை தரவு வழங்குநர்கள் அல்லது வெளிதரப்பு மூலங்களிலிருந்து பெறப்பட்ட உள்ளீடுகளுடன் எங்களது சொந்த மதிப்பீட்டு மாதிரியமைப்புகளைப் பயன்படுத்தி, நிதியம்ச நிலையில் பொருட்பாட்டு மாறுபாடுகளுக்கான மூலக் காரணங்களைக் கண்டுபிடிப்பது இதில் உள்ளடங்கும்.

நிலை 3 நிதி அம்சங்களின் மாதிரிகளில், எங்களது மதிப்பீட்டு நிபுணர்களின் உதவியுடன், பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைகளும் செய்யப்பட்ட முக்கிய ஊகங்களும் நியாயமானவையா என்பதை நாங்கள் பரிசீலித்தோம்.

நிலை 2 மற்றும் 3-லான நிதி அம்சங்கள் அனைத்திலும் பின்வரும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டோம்:

- தொகுதி செய்திருக்கக்கூடிய பொருத்தமற்ற மதிப்பீடுகளின் உத்தேச அறிகுறிகளை அடையாளம் காண எதிர்தரப்பு மதிப்பீடுகளைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும் ஈட்டுப்பொருள் சர்ச்சைகள் குறித்த நடவடிக்கைகள்; மற்றும்
- தேவையான கணக்கியல் தரங்களின் அடிப்படையில் தொகுதியின் நிதி அறிக்கைகளில் உள்ள வெளிப்பாடுகள் போதுமானவையா என்பதைப் பரிசீலித்தோம்.

மொத்தத்தில், நியாய மதிப்பில் கணக்கிடப்பட்ட நிலை 2 மற்றும் 3 நிதி அம்சங்களின் மதிப்பீடு நியாயமான விளைவுகளின் வரையறைக்குள் இருந்தது.

*முக்கிய தணிக்கை விவகாரம்*

**நல்லெண்ண மதிப்பு சேதாரம்**
**(நிதி அறிக்கைகளின் குறிப்புகள் 2.25, 36 பார்க்கவும்)**

தொகுதிக்கு அதன் தொழில் பற்றுமானங்களிலிருந்து குறிப்பிடத்தக்க அளவு நல்லெண்ண மதிப்பு கிடைக்கிறது. 31 டிசம்பர் 2022 நிலவரப்படி, தொகுதியின் இருப்புநிலைக் குறிப்பில் நல்லெண்ண மதிப்பு S$4,440 மில்லியன்.

நல்லெண்ண மதிப்பின் சேதாரத்தைப் பரிசீலிக்கையில், தேவையான ரொக்கம் ஈட்டும் பிரிவுகளிலிருந்து (CGU) மீட்கக்கூடிய தொகைகளைக் கணிக்க நிர்வாகம் குறிப்பிடத்தக்க மதிப்பீடு செய்கிறது.

வங்கி CGU பிரிவுகளைப் பொறுத்தவரை, தள்ளுபடி செய்யப்பட்ட ரொக்கப் புழக்கத்தின் கணிப்பு உள்ளடங்கும். இந்தக் கணிப்புக்குப் பயன்படுத்தப்படும் குறிப்பிடத்தக்க ஊகங்களில் பின்வருவன உள்ளடங்கும்:

- எதிர்கால ரொக்கப் புழக்க முன்னுரைப்புகள்;
- இடருக்கேற்ப திருத்தப்பட்ட தள்ளுபடி விகிதங்களை நிர்ணயிப்பதற்கான உள்ளீடுகள்; மற்றும்
- நிரந்தர வளர்ச்சி விகிதங்கள்.

காப்புறுதி CGU பிரிவைப் பொறுத்தவரை, மதிப்பாராய்வு உத்தியைத் தொகுதி பயன்படுத்துகிறது. நடப்பிலுள்ள தொழிலில் பொதித்துள்ள மதிப்பும் புதிய தொழில்களின் முன்னுரைக்கப்பட்ட பகிர்வுக்குரிய லாபத்தின் கணிக்கப்பட்ட மதிப்பும் இதில் உள்ளடங்கும். இந்த மதிப்பீட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட முக்கிய ஊகங்களில் பின்வருவன உள்ளடங்கும்:

- நீண்டகால உத்திபூர்வ சொத்துக் கலவையின் அடிப்படையிலான முதலீட்டுப் பலாபலன்கள் மற்றும் எதிர்பார்க்கப்படும் எதிர்காலப் பலாபலன்கள்; மற்றும்
- இடருக்கேற்ப திருத்தப்பட்ட தள்ளுபடி விகிதங்கள்.

இதிலுள்ள சிக்கலின் அளவினாலும் தேவைப்படும் மதிப்பீட்டின் அளவினாலும், இதனை முக்கிய தணிக்கை விவகாரமாகக் கருதுகிறோம்.

*விவகாரத்திற்கு எங்கள் தணிக்கை எவ்வாறு தீர்வு கண்டது*

நாங்கள் தொகுதியின் CGU பிரிவுகளை நிர்வாகம் அடையாளம் கண்டதன் நியதியையும் மீட்கக்கூடிய தொகைகளைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறையையும் பரிசீலனை செய்தோம். அதோடு, பயன்படுத்தப்பட்ட முக்கிய ஊகங்களை மதிப்பிட்டு, இந்த ஊகங்களில் நேரக்கூடிய மாற்றத்தால் சேதாரம் நேருமா என்பதை நிர்ணயிக்க அந்த முக்கிய ஊகங்களில் உணர்திறன் பகுப்பாய்வைப் பயன்படுத்தினோம்.

*வங்கி CGU பிரிவுகள்*

எங்கள் மதிப்பீட்டு நிபுணர்களுடன் சேர்ந்து நாங்கள் இவற்றைப் பரிசீலனை செய்தோம்:

- முந்திய முன்னுரைப்புகளுடன் உண்மையான முடிவுகளை ஒப்பிட்டு, நிர்வாகத்தின் ரொக்கப் புழக்க முன்னுரைப்புகளை;
- தள்ளுபடி விகிதங்களையும் வளர்ச்சி விகிதங்களையும் நிர்ணயிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறையையும் வெளிதரப்புத் தரவு மூலங்களையும்; அதோடு
- வளர்ச்சி விகித ஊகங்களைத் தொகுதியின் கடந்தகாலப் பலாபலனோடும் வெளிதரப்புத் தொழில்துறை மற்றும் பொருளியல் குறியீடுகளோடும் ஒப்பிடுதல்.

*காப்புறுதி CGU பிரிவு*

எங்களது காப்புறுதி நிபுணர்களுடன் சேர்ந்து, நாங்கள் இவற்றைப் பரிசீலனை செய்தோம்:

- மதிப்பாராய்வு மதிப்பைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைகள்; அதோடு
- மதிப்பாராய்வு மதிப்பை நிர்ணயிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட முதலீட்டு ஆதாயங்கள் மற்றும் இடருக்கேற்ப திருத்தப்பட்ட தள்ளுபடி விகிதங்கள் உள்ளிட்ட முக்கிய ஊகங்கள்.

நாங்கள் மேற்கொண்ட தணிக்கை நடவடிக்கைகளின் அடிப்படையில், நிர்வாகம் செய்த ஊகங்களும் கணிப்புகளும் நியாயமாக இருப்பதாகக் கண்டறிந்தோம்.

*முக்கிய தணிக்கை விவகாரம்*

**காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகளின் மதிப்பீடு**
**(நிதி அறிக்கைகளின் குறிப்புகள் 2.25, 22, 38.4 பார்க்கவும்)**

தொகுதியின் காப்புறுதி செயல்பாடுகள் கிரேட் ஈஸ்டர்ன் ஹோல்டிங்ஸ் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் (GEH) மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன.

ஆயுள் காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகள் குறித்து நிர்வாகம் செய்த மதிப்பீட்டில் சிக்கலான காப்புறுதி கணக்கீட்டு முறைகளும் மாதிரியமைப்புகளும் பயன்படுத்தப்படுகின்றன. நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் குறித்து ஊகங்கள் செய்வதற்குத் தேவையான குறிப்பிடத்தக்க மதிப்பீடும் இதில் உள்ளடங்கும். அந்த ஊகங்களில் பின்வருவன உள்ளடங்கும்: இறப்பு விகிதம், நோய்நிலை, செலவு, வழுவல், ஒப்படைப்பு மற்றும் வட்டி விகிதங்கள்.

கடந்தகால அனுபவத்திற்கு மேலாக, இந்த ஊகங்களின் பயன்பாட்டில் நிர்வாகத்தின் மதிப்பீடும் சம்பந்தப்பட்டிருக்கிறது. பயன்படுத்தப்பட்ட இந்த ஊகங்களில் நேரும் மாற்றங்களால் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகளின் மதிப்பீட்டிலும், அதன் தொடர்பிலான தொகுதியின் ஒருங்கிணைக்கப்பட்ட லாப அல்லது நட்ட அறிக்கையிலும் பொருளளவில் விளைவுகள் நேரலாம்.

*விவகாரத்திற்கு எங்கள் தணிக்கை எவ்வாறு தீர்வு கண்டது*

நாங்கள் இந்த விவகாரத்திற்குத் தீர்வுகாண பின்வரும் தணிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டோம்:

- நாங்கள், மாதிரியமைப்பு மாற்றங்கள், ஊகங்களின் அமைப்புமுறை உள்ளிட்ட காப்புறுதி மதிப்பீட்டு முறையைப் புரிந்துகொண்டோம்;
- பயன்படுத்தப்பட்ட தரவுகளின் துல்லியம் மற்றும் முழுமை மீதான கட்டுப்பாடுகளின் வடிவமைப்பையும் நடைமுறைச் செயலாற்றலையும் நாங்கள் சோதித்தோம்;
- நாங்கள் பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டுக் கணக்கீட்டு முறைகளைப் புரிந்துகொண்டு, முந்திய மதிப்பீட்டிலிருந்து கணக்கீட்டு முறைகளில் செய்யப்பட்ட மாற்றங்களை அடையாளம் கண்டு, அடையாளம் காணப்பட்ட பொருளளவிலான மாற்றங்களின் நியாயத்தையும் விளைவுகளையும் பரிசீலனை செய்தோம். நாங்கள் தொழில்துறை பற்றிய எங்கள் அறிவாற்றலையும் அனுபவத்தையும் பயன்படுத்தி இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு, கணக்கீட்டு முறைகளும் அதில் செய்யப்பட்ட மாற்றங்களும் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி நடைமுறைகளோடும் சந்தை அனுபவத்திலிருந்து கிடைத்த எதிர்பார்ப்புகளோடும் ஒத்திருக்கிறதா என்பதைப் பரிசீலித்தோம்;
- நாங்கள் கணக்கீட்டு முறைகளும் ஊகங்களும் பொருத்தமாகப் பயன்படுத்தப்பட்டனவா என்பதை மதிப்பிட, மாதிரி அடிப்படையில் மாதிரியமைப்புக் கூறுகளை சுயேச்சை முறையில் மறுஆய்வு செய்தோம்; அதோடு
- நாங்கள் GEH-ன் கடந்தகால அனுபவங்களுடனும் கவனிக்கத்தக்க சந்தை தரவுகளோடும், பொருந்தத்தக்க அடிப்படையில், ஒப்பீடுகள் செய்து, நிர்வாகம் பயன்படுத்திய முக்கிய ஊகங்கள் எந்த அளவுக்கு நியாயமானவை என்பதை மதிப்பிட்டோம். அந்த ஊகங்களில் பின்வருவன உள்ளடங்கும்: இறப்பு விகிதம், நோய்நிலை, செலவு, வழுவல், ஒப்படைப்பு மற்றும் வட்டி விகிதங்கள்;

நாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள், பெறப்பட்ட ஆதாரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், நிர்வாகம் பயன்படுத்திய கணக்கீட்டு முறைகளும் ஊகங்களும் நியாயமாக இருப்பதாகக் கண்டறிந்தோம்.

# Oversea-Chinese Banking Corporation Limited and its Subsidiaries

(சிங்கப்பூரில் இணைக்கப்பட்டது. பதிவு எண்: 193200032W)

## உறுப்பினர்களுக்கு சுயேச்சை தணிக்கையாளர்களின் அறிக்கை (தொடர்ச்சி)

**இதர விவரங்கள்**

இதர விவரங்களுக்கு நிர்வாகம் பொறுப்பாகும். இதர விவரங்களில், இந்தத் தணிக்கையாளர் அறிக்கைக்குமுன் எங்களுக்குக் கிடைத்த இயக்குநர்களின் அறிக்கையும் (நிதி அறிக்கைகளும் அதுகுறித்த எங்கள் தணிக்கையாளர் அறிக்கையும் உள்ளடங்கவில்லை), இத்தேதிக்குப் பிறகு எங்களுக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் ஆண்டு அறிக்கையின் மற்ற பகுதிகளும் (மற்ற பகுதிகள்) உள்ளடங்கும்.

நிதி அறிக்கைகள் குறித்த எங்கள் கருத்தில் இந்த மற்ற விவரங்கள் உள்ளடங்கவில்லை. அதோடு, இது தொடர்பாக எந்தவித உறுதியான முடிவுக்கும் நாங்கள் வரவில்லை, வெளியிடவும் மாட்டோம்.

நிதி அறிக்கைகளைத் தணிக்கை செய்வதில், மேற்காணும் இதர விவரங்களையும் வாசித்து, அவ்வாறு செய்யும்போது, நிதி அறிக்கைகளுடன் அல்லது தணிக்கையில் நாங்கள் கண்டுபிடித்தவற்றுடன் இதர விவரங்கள் ஒத்திருக்கிறதா அல்லது விவரப் பிழை இருப்பதுபோலத் தெரிகிறதா என்பதைப் பரிசீலிப்பது எங்கள் பொறுப்பு.

இந்தத் தணிக்கையாளர் அறிக்கையின் தேதிக்கு முன்பாக எங்களுக்குக் கிடைத்த இதர விவரங்கள் மீதான தணிக்கையை அடிப்படையாகக் கொண்டு, இதர விவரங்களில் விவரப் பிழை இருப்பதாக நாங்கள் முடிவுக்கு வந்தால், அது குறித்து நாங்கள் தகவல் தெரிவிக்கவேண்டும். இது தொடர்பாக நாங்கள் தகவல் தெரிவிப்பதற்கு எதுவுமில்லை.

ஆண்டு அறிக்கையின் மற்ற பகுதிகளைப் படிக்கையில், அதில் விவரப்பிழை இருப்பதாக நாங்கள் முடிவுக்கு வந்தால், இயக்குநர்களிடம் அதுகுறித்து தகவல் தெரிவித்து, SSAs-க்கு ஏற்ப தகுந்த நடவடிக்கை எடுக்கச் செய்யவேண்டும்.

**நிதி அறிக்கைகளில் நிர்வாகம் மற்றும் இயக்குநர்களின் பொறுப்புகள்**

இந்த நிதி அறிக்கைகள் சட்டத்திற்கும் SFRS(I)s தரங்களுக்கும் ஏற்றபடி தயாரிக்கப்பட்டு, உண்மையான மற்றும் நியாயமான கருத்தை வெளிப்படுத்தும் வகையில் படைக்கப்படுவது நிர்வாகத்தின் பொறுப்பாகும். அதோடு, அதிகாரமற்ற உபயோகம் அல்லது விற்பனையில் ஏற்படும் இழப்புகளிலிருந்து சொத்துகள் பாதுகாக்கப்படுவதற்கு நியாயமான உறுதியளிக்கக்கூடிய உள் கணக்கியல் கட்டுப்பாட்டு முறையைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல்; மற்றும் பரிவர்த்தனைகள் முறையான அதிகாரம்பெற்று, உண்மையான நியாயமான லாப நட்டக் கணக்குகளையும் இருப்பு நிலைக் குறிப்புகளையும் தயாரிக்கவும், சொத்துக் கணக்கைக் கட்டிக்காக்கவும் அவசியமான வகையில் பதிவு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவது ஆகியவையும் இதில் அடங்கும்.

நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில், தொகுதியால் தொடர்ந்து செயல்படத்தக்க நிறுவனமாகத் தொடரக்கூடிய ஆற்றலை மதிப்பிட்டு, பொருத்தமாயின், இது தொடர்பான விவகாரங்களை வெளியிடுவதும் தொடர்ந்து செயல்படத்தக்க நிறுவனத்திற்கான கணக்கியல் அடிப்படையைப் பயன்படுத்துவதும் நிர்வாகத்தின் பொறுப்பு. தொகுதியை கலைக்க அல்லது செயல்பாட்டை நிறுத்த எண்ணினால் அல்லது இவ்வாறு செய்வதைத் தவிர வேறு சாத்தியமான மாற்றுவழி இல்லாத சூழ்நிலைகள் மட்டுமே இதற்கு விதிவிலக்கு.

தொகுதியின் நிதிநிலை தாக்கல் நடைமுறையைக் கண்காணிப்பது இயக்குநர்களின் பொறுப்புகளில் உள்ளடங்கும்.

**நிதி அறிக்கைகளின் தணிக்கையில் தணிக்கையாளரின் பொறுப்புகள்**

மொத்த நிதி அறிக்கைகளில், மோசடி அல்லது பிழையால், விவரப் பிழைகள் இல்லாதிருக்கிறதா என்பதற்கு நியாயமான உறுதி பெற்று, எங்கள் கருத்தை உள்ளடக்கும் தணிக்கையாளரின் அறிக்கையை வெளியிடுவதே எங்கள் இலக்கு. நியாயமான உறுதி என்பது உயர் நிலையிலான உறுதியாக இருந்தாலும், சிங்கப்பூர் தணிக்கை தரங்களுக்கு ஏற்ப நடத்தப்படும் தணிக்கை, இருக்கக்கூடிய விவரப் பிழையை எப்போதும் கண்டுபிடித்துவிடும் என்பதற்கு உத்தரவாதமில்லை. மோசடியால் அல்லது பிழையால் விவரப் பிழைகள் ஏற்படலாம். விவரப் பிழைகள் தனியாக அல்லது மொத்தமாக, இந்த நிதி அறிக்கைகளின் அடிப்படையில் பயன்பாட்டாளர்கள் எடுக்கும் பொருளியல் தீர்மானங்களை பாதிக்கக்கூடும் என நியாயமான முறையில் எதிர்பார்க்கப்பட்டால், அவை முக்கியமானவையாகக் கருதப்படும்.

சிங்கப்பூர் தணிக்கை தரங்களின்படி நடத்தப்பட்ட தணிக்கையின் ஒரு பகுதியாக, தணிக்கை முழுவதும் நிபுணத்துவ மதிப்பீட்டை பயன்படுத்தி, நிபுணத்துவ ஐயவாதத்தை நிலைநாட்டினோம். அதோடு நாங்கள்:

- மோசடி அல்லது பிழையால் நிதி அறிக்கைகளில் விவரப் பிழைகள் நேரக்கூடிய அபாயத்தை அடையாளம் கண்டு, மதிப்பிட்டு, இந்த இடர்களுக்குப் பொருத்தமான தணிக்கை நடைமுறைகளை மேற்கொண்டு, எங்கள் கருத்துக்கு அடிப்படை வழங்குவதற்குப் போதுமான, பொருத்தமான தணிக்கை ஆதாரங்களைப் பெறவேண்டும். பிழையால் நேரும் விவரப் பிழையைவிட மோசடியால் நேரும் விவரப் பிழையை அடையாளம் காணாதிருக்கக்கூடிய அபாயம் அதிகம். ஏனெனில், மோசடியில் கூட்டுச்சதி, ஏமாற்று, வேண்டுமென்றே செய்யப்பட்ட விடுபாடுகள், பிறழ்கூற்று அல்லது உள் கட்டுப்பாடு மீறல் ஆகியவை இருக்கக்கூடும்.
- சூழ்நிலைக்குப் பொருத்தமான தணிக்கை நடைமுறைகளை வடிவமைக்க தணிக்கைக்குத் தேவையான உள் கட்டுப்பாட்டைப் பற்றிய புரிந்துணர்வைப் பெறவேண்டும். தொகுதியின் உள் கட்டுப்பாட்டின் செயல்திறன் பற்றி கருத்து தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.
- பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் பொருத்தத்தையும், நிர்வாகம் செய்த கணக்கியல் உத்தேசங்கள் மற்றும் அது தொடர்பான வெளிப்பாடுகள் ஆகியவற்றின் நியாயத்தையும் பரிசீலிக்கவேண்டும்.
- தொடர்ந்து செயல்படக்கூடிய கணக்கியல் அடிப்படையை நிர்வாகம் பயன்படுத்தியது பொருத்தமானதா என்பது பற்றி தீர்மானிக்கவேண்டும். அதோடு, பெறப்பட்ட தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையில், தொகுதி தொடர்ந்து செயல்படக்கூடிய நிறுவனமாகத் தொடரக்கூடிய ஆற்றல் குறித்து குறிப்பிடத்தக்க ஐயம் ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் தொடர்பான விவர நிச்சயமின்மை இருக்கிறதா என்பதைத் தீர்மானிக்கவேண்டும். விவர நிச்சயமின்மை இருப்பதாக நாங்கள் தீர்மானித்தால், நிதி அறிக்கைகளில் இடம்பெற்றுள்ள அது தொடர்பான வெளிப்பாடுகள் குறித்து எங்கள் தணிக்கையாளரின் அறிக்கையில் கவனத்தை ஈர்க்கவேண்டும், அல்லது இந்த வெளிப்பாடுகள் போதுமானவையாக இல்லாவிட்டால், எங்கள் கருத்தைத் திருத்தியமைக்கவேண்டும். எங்களது தீர்மானங்கள், தணிக்கையாளரின் அறிக்கை தேதி வரை பெறப்பட்ட தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையிலானவை. ஆயினும், வருங்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள், தொகுதி தொடர்ந்து செயல்படக்கூடிய ஆற்றலை முடிவுக்குக் கொண்டுவரக்கூடும்.
- வெளிப்பாடுகள் உட்பட, நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த படைப்பு, அமைப்புமுறை, உள்ளடக்கம் ஆகியவற்றையும், நியாயமாகப் படைக்கப்படும் வகையில் அடிப்படை பரிவர்த்தனைகளையும் நிகழ்வுகளையும் நிதி அறிக்கைகள் பிரதிநிதிக்கிறதா என்பதையும் பரிசீலிக்கவேண்டும்.
- ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகள் குறித்து கருத்து தெரிவிக்க தொகுதியின் நிறுவனங்கள் அல்லது தொழில் நடவடிக்கைகளின் நிதி விவரங்கள் குறித்து போதுமான, பொருத்தமான தணிக்கை ஆதாரங்கள் பெறவேண்டும். தொகுதியின் தணிக்கை முறைக்கும், மேற்பார்வைக்கும், செயல்பாட்டுக்கும் நாங்கள் பொறுப்பாவோம். எங்கள் தணிக்கை கருத்துக்கு நாங்கள் மட்டுமே பொறுப்பாவோம்.

தணிக்கையின் திட்டமிடப்பட்ட அளவு, நேரம், தணிக்கையின்போது உள் கட்டுப்பாட்டில் நாங்கள் அடையாளம் காணும் ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளிட்ட தணிக்கையின் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இதர விவகாரங்களையும் நாங்கள் இயக்குநர்களிடம் தெரியப்படுத்துவோம்.

சுயேச்சை நடைமுறை தொடர்பான நெறிமுறை நிபந்தனைகளுக்கு நாங்கள் உட்பட்டதாகவும் இயக்குநர்களிடம் அறிக்கை சமர்ப்பிப்போம். அதோடு, எங்கள் சுதந்திரத்தையும், பொருந்துமாயின் அதைச் சார்ந்த பாதுகாப்புகளையும், பாதிக்கக்கூடும் என நியாயமாகக் கருதப்படும் எல்லா உறவுமுறைகளையும் இதர விவகாரங்களையும் அவர்களிடம் தெரியப்படுத்துவோம்.

இயக்குநர்களிடம் தெரியப்படுத்தும் விவகாரங்களிலிருந்து, நடப்பு காலகட்டத்தின் நிதி அறிக்கைகளின் தணிக்கைக்கு மிகவும் முக்கியமான விவரங்களை நிர்ணயித்து, முக்கிய தணிக்கை விவகாரங்களை அடையாளம் காண்போம். இவ்விவகாரம் குறித்த பொது வெளிப்பாட்டை விலக்கும் சட்டம் அல்லது விதிமுறை இருந்தாலொழிய அல்லது, அரிய சூழ்நிலைகளில், ஒரு விவகாரத்தை வெளியிடுவதால் பொது நலனைவிட அதிக பாதிப்பு நேரக்கூடும் என்ற நியாயமான எதிர்பார்ப்பால் விவகாரத்தை எங்கள் அறிக்கையில் வெளியிடக்கூடாது என நாங்கள் நிர்ணயித்தாலொழிய, எங்கள் தணிக்கையாளரின் அறிக்கையில் இவ்விவகாரங்களை நாங்கள் எடுத்துக் கூறியிருக்கிறோம்.

**மற்ற சட்டப்பூர்வ, ஒழுங்குவிதி நிபந்தனைகள் குறித்த அறிக்கை**

எங்கள் கருத்துப்படி, நாங்கள் தணிக்கையாளர்களாக இருக்கும் வங்கியும் சிங்கப்பூரில் ஒருங்கிணைக்கப்பட்ட துணை நிறுவனங்களும் இச்சட்டப்படி தேவையான கணக்கு மற்றும் இதரப் பதிவேடுகளை சட்டப்படி முறையாகப் பாதுகாத்து வைத்துள்ளன.

இந்த சுயேச்சை தணிக்கையாளரின் அறிக்கையைத் தயாரிக்க தணிக்கை ஈடுபாட்டுப் பங்காளியாகச் செயல்பட்டவர் லியன் வீ சியாவ்.

**PricewaterhouseCoopers LLP**

பொது கணக்காய்வாளர்கள் மற்றும் சார்ட்டர்ட் கணக்காய்வாளர்கள்
சிங்கப்பூர் 23 பிப்ரவரி 2023